செ.வெ.எண். 74/பிப்ரவரி தேதி : 28.02.2017

# தருமபுரி மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி கலையரங்கில் சாலை விபத்துக்களை முழுமையாக தடுப்பது குறித்த சாலை பாதுகாப்பு குறித்த ஒரு நாள் கருத்தரங்கு கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பண்டிகங்காதர்,இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.






தருமபுரி மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி கலையரங்கில் சாலை விபத்துக்களை முழுமையாக தடுப்பது குறித்த ஒரு நாள் கருத்தரங்கு கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பண்டிகங்காதர் ,இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (28.02.2017) நடைபெற்றது.

மேற்படி கருத்தரங்கிற்கு மேற்படி நடைபெற்ற இந்த ஒரு நாள் கருத்தரங்கில் சாலைப் பாதுகாப்பின் அவசியம் குறித்தும், தருமபுரி மாவட்டத்தில் சாலை விபத்துக்களை 50 சதவீதமாக குறைப்பது குறித்தும் பல்வேறு கலந்துரையாடல்கள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நான்கு குழுக்களாக பிரித்து ஒவ்வொரு குழுக்களிடமும் ஆலோசனைகளும் பெறப்பட்டது.

மேலும் தலைகவசம் அணிவதன் அவசியம் குறித்து ஒட்டு வில்லைகளை கல்லூரி மாணவ, மாணவியர்களின் கைபேசியில் ஒட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துக்கல்லூரி முதல்வர் மரு. சுவாமிநாதன், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் (பொ) திரு.இரா.செந்தில்வேலன், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.அ.அன்புசெழியன், திரு.ச.முத்துக்குமார், திரு.வி.சிவானந்தம், திரு.ந.மணிமாறன் கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் மற்றும் பள்ளி, கல்லூரிகளின் முதல்வர்கள்,

தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவ-மாணவியர்கள் சுமார் 1000 பேர் உட்பட துறை ரீதியான அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.